உ

# வைத்திய சந்திரிகா.

ஓர் உயர்தர தமிழ் மாதப்பத்திரிகை.

பிரதி ஆங்கிலமாதம் முதல்வாரத்தில் வெளிவரும்

**Vol. 4 September 1942 No. 9**

4b5

விஷய சூசிகை. பக்கம்


ஔஷதசாரம் (பண்டிட் நாராயணய்யங்கார்) 108-115

பலவகை ,, 57-64

ஆயுர்வேதத்தின் முக்கியத்வம் (மதுரை வள்ளாளபட்டி பண்டிட் K. P. G. பணிகர்) 1—3

ஜ்வரம் (மதுக்கூர் Dr. K. ஷாரோடி) 3—6

திருச்சி ஆயுர்வேத சபா 6



சந்தா விகிதம்.

வருஷ சந்தா:—

உள்நாட்டுக்கு ரூ. 2

வெளிநாட்டுக்கு ரூ. 3

விளம்பர விகிதம்.

மாதம் 1-க்கு பக்கம் 1-க்கு ரூ 8

,, ,, ½-க்கு ரூ 4

,, ,, ¼-க்கு ரூ 2

கிடைக்குமிடம்:—

**Pandit, S. NARAYANA IYENGAR.**

**Editor and Publisher.**

No. 2, Police Station West Lane, Madura.

[விலை 0—3—0

பண்டிட் நாராயண அய்யங்கார் அவர்களின்

## ருதுசூல நிவாரணி

இது கைகண்ட மருந்து. கருப்பையை (கர்ப்பாசயத்தை) ஒழுங்கு செய்து ஆரோக்ய நிலைமையில் வைப்பதுடன் மாத விடாய் காலங்களில் உண்டாகும் வயிற்றுவலி அதிக ரக்தப் பெருக்கு, முதலியவைகளைப் பூர்ணமாக நிறுத்தி விடுகின்றது. மற்ற மருந்துகளால் அசாத்தியமெனத் தள்ளப்பட்ட பல சூதக நோய்களை நிவர்த்தி செய்து பூர்ண ஆரோக்யத்தை யளிக்கின்றது.

உபயோகிக்கும்விதம்—தினம் காலையில் 1 மாத்திரை, சாயங் காலம் 1 மாத்திரை விதம் மாத்திரையை வாயில் போட்டுக் கொண்டு வெந்நீர் விட்டு விழுங்கவேண்டும். பத்தியம்—அதிக மாக வாயு பதார்த்தம் சேராமலிருப்பது நலம்.

ஒரு மாத மருந்து விலை ரூ 10 தபால்செலவு வேறு.

விலாசம்—**பண்டிட் நாராயணய்யங்கார்**

கெ. 2. போலீஸ்டேஷன் மேற்கு சந்து மதுரை.

## ஸஹஸ்ரயோகம்.

இது மலையாள தேசத்தில் பிரசித்தமான ஓர் வட மொழி வைத்ய நூலின் தமிழ் மொழி பெயர்ப்பு. இந் நூலை யனுசரித்தே மலையாளத்தில் மருந்து முறைகள் தயாரிக்கப்படுகின்றன. இந்நூலில் கஷாய முறைகள் 184, கிருதமுறைகள் 70, தைலமுறைகள் 85, சூர்ண முறைகள் 89, லேகியமுறைகள் 20, குளிகைமுறைகள் 73, ஜன்னிமருந்துகள் 75, கண்ணோய்களுக்கு மருந்துகள் 92, காதுநோய்களுக்கு மருந்துகள் 6, மூக்குநோய்களுக்கு மருந்துகள் 6, முகரோக மருந்துகள் 3, தொண்டை நோய் களுக்கு மருந்துகள் 6, உள்வாய் ரோகங்களுக்கு மருந்து கள் 5, பலவகை மருந்துகள் 153 ஆக இவ்விதம் மொத்தம் 867 மருந்துகள் வியக்தமாகச் சொல்லப்பட்டிருக்கின்றன. இந்த ஒரு நூலே வைத்யர்களுடைய தேவைக்குப் போது மானது. புத்தகம் விலை ரூ. 1 தபால் கூலி வேறு.

கிடைக்குமிடம்—பண்டிட் நாராயணய்யங்கார்

கெ. 2, போலீஸ் ஸ்டேஷன் மேற்கு சந்து மதுரை.

வெங்கடேஸ்வர் பிரஸ் காக்காத்தோப்புத்தெரு, மதுரை—42.

தோடை, சுக்கு, கடுக்காய், செவ்வியம் கோரை, வெள்ளை சாரணத்தி, சீந்தில், விருத்ததாரு, சதகுப்பை, சிறுகொஞ்சில், அமுக்கரா, அதிவிடயம், புங்கை, தண்ணீர்விட்டான், திப்பிலி, மருதாணி, மல்லிவிதை, கண்டங்கத்திரி வேர், முள்ளிவேர், ஆகிய இவற்றில் அரத்தை நீங்கலாக மற்றச்சரக்குகள் சமவிடையாகவும் அரத்தை இரண்டு எடையாகவும் எடுத்து இடித்து முறைப்படி கஷாயம் செய்து கொடுக்க வாதநோய்கள் போம்,

219. ராஸ்நாதி:—அரத்தை, சீந்தில், தேவதாரு, சுக்கு, ஆமணக்குவேர், இவைகளைச் சமயிடையாக எடுத்து முறைப்படி கஷாயம் செய்துகொடுக்க வாதநோய்கள் போம்.

220. ராஸ்நாதி:—அரத்தை, சிறுகொஞ்சில், ஆமணக்குவேர், தேவதாரு, வெள்ளைச்சாரணத்தி, சீந்தில, கொன்றை, இவைகளைச் சமயிடையாக எடுத்து இடித்து முறைப்படி கஷாயம் செய்து கொடுக்க வாதநோய்கள் போம்.

221. விடங்காரிஷ்டம்:—வாய்விளங்கம், தேசாவாரம், அரத்தை, வெப்பாலைப்பட்டை, வெப்பாலையரிசி, மலைதாங்கிவேர், எலாவாலுகம், நெல்லிவற்றல், வகைக்குத்தோலா இருபது இடித்து ஜலம் சின்னப்படி 256 விட்டு 32 படி ஜலமாக வற்றவைத்துக் கஷாயம் செய்து வடிகட்டித் தேன் சின்னப்படி இருபது சேர்த்து அதில் காட்டாத்திப்பூ தோலா 80, சன்னலவங்கப்பட்டை, பச்சிலை, எலம், வகைக்குத்தோலா 2⅔, ஞாழல், கொக்குமந்தாரை, லோத்திப்பட்டை வகைக்குத்தோலா நான்கு, திரிகடு வகைக்குத் தோலா 4 இடித்து வஸ்திரகாயம் செய்து போட்டு மூடி மாதம் வைத்திருந்து வடிகட்டி வேளைக்கு ஒரு அவுன்சு சாப்பிட வாதரோகங்கள் தீரும்.

## ஆமவாதம்.

222. அஜமோதாதி வடகம்:—ஓமம், மிளகு, திப்பிலி, வாய்விளங்கம், தேவதாரு, கொடிவேலி, சதகுப்பை, இந்துப்பு, தேசாவாரம, வகைக்குத் தோலா நான்கு, சுக்கு தோலா நாற்பது, விருத்ததாரகம் தோலா நாற்பது, கடுக்காய் தோலா இருபது, இவைகளை

இடித்து வஸ்திரகாயம் செய்து சர்க்கரை தோலா 136 பாகுவைத்து அதில் சூர்ணங்களைப்போட்டுக் கிளறி அரைத்தோலாயிடை வடகங்களாகச்செய்து வேளைக்கு ஒரு வடகம் தகுந்த அனுபானத்துடன் சாப்பிட ஆமவாதம் நீங்கும். குறிப்பு:—விருத்ததாரகம் என்பது கொடியினத்தைச்சேர்ந்தது. இதின் வேரும, விதையும் மருந்தில் சேருகின்றது. இவ்விடத்தில் விருத்ததாரக விதையை எடுத்துக் கொள்ளவேண்டுமென்று உரையில் கூறப்படுகின்றது. ஆனல் பல வைத்தியர்கள் இங்கு வேரையே எடுத்துக்கொள்ளுகின்றனர். அது நியாயமென்பது எமது அபிப்பிராயம். வடமொழி நூல்களில் விதையை எடுத்துக்கொள்ள வேண்டிய இடங்களில் விருத்த தாரகபீஜம் என்று வியக்தமாக வசனம் காணப்படுகின்றது. பொதுவில் விருத்ததாரகமென்றால் வேரைத்தான் எடுத்துக்கொள்ள வேண்டும். இவ்விடத்தில் விருத்ததாரகம் என்றே வசனம் காணப்படுவதால் வேரை எடுத்துக்கொள்ளுவதுதான் பொருத்தமாகும். நமது வாடிக்கையும் அதுவே. இந்த வடகத்தில் சர்க்கரையின் அளவு குறைவாக இருப்பதால் மற்ற வடகங்களில் செய்வதுபோல பாகுபதம் வரும்வரையில் பொருத்திருந்து பிறகு சூர்ணத்தைச் சேர்க்கமுடியாது. ஆகவே சர்க்கரை கரைந்தவுடன் சூர்ணத்தைப் போட்டுக் கிளறிவிடவேண்டும். மருந்து ஈரமாகவிருந்தால் பிறகு வெய்யிலில் காயவைத்துக் கொள்ளவும். சர்க்கரை சேர்க்காமல் சூர்ணமாகவும் வென்னீரில் கலந்து உபயோகிக்கலாம். இம்மருந்து மலத்தை இளக்கும் குணமுள்ளது. தினம் இரண்டுவேளை உபயோகிக்கலாம்.

223. ராமபாணம்:—ரஸம், வத்ஸநாபி, கிராம்பு, கந்தகம், வகைக்குத்தோலா ஒன்று, மிளகு தோலா இரண்டு, ஜாதிக்காய் அரைத்தோலா, இவைகளில் ரஸம், கந்தகம், இரண்டையும் கல்வத்திலிட்டு நன்றாக அரைத்துக்கொண்டு பிறகு மற்ற சரக்குகளையும் சேர்த்துப்பொடிசெய்து பிறகு புளியம்பழ ரஸத்தால் அரைத்து இரண்டு குன்றியிடை மாத்திரையாகச் செய்து உலர்த்தி வேளைக்கு ஒரு மாத்திரை விதம் தகுந்த அனுபானத்துடன் சாப்பிட ஆமவாதம் நீங்கும்.

224. கைசோரகுக்கலு:—மகிஷாக்ஷ குக்கலு தோலா 64 சுத்தமாகப்பொருக்கி எடுத்து ஓர் துணியில் மூட்டையாகக்கட்டிப் பானையில் போட்டு அதில் திரிபலை வகைக்குத்தோலா 64, சிந்தில் தோலா 128, இவைகளையும் இடித்துப்போட்டு ஜலம் சின்னப்படி 48 விட்டு அடுப்பேற்றி 24 படியாக வற்றவைத்துக் கஷாயம் செய்து வடிகட்டி அக்கஷாயத்தை ஓர் இரும்பு பாத்திரத்தில் விட்டு மறுபடியும் அடுப்பேற்றி அதில் கஷாய சாமான்களுடன் போட்ட குக்கிலைமாத்திரம் அரைத்துச் சேர்த்து நன்றாகக்கொதித்துப்பிறகு பாகுபோலாகும் சமயத்தில் கீழே இறக்கி திரிபலை வகைக்குத் தோலா இரண்டு திரிகடு வகைக்குத்தோலா இரண்டு, வாய்விளங்கம் தோலா இரண்டு, சிவதை, தந்தி, வகைக்குத்தோலா ஒன்று, சிந்தில்பொடி தோலா நான்கு, இவைகளைப் பொடிசெய்து அதில் போட்டுக்கிளரி நெய் தோலா 32 சேர்த்துக்கலந்து பத்திரப்படுத்தி வேளைக்கு அரைத்தோலாவை பால், அல்லது ஜலம், அனுபானத்தில் கொள்ள வாதரக்தம் தீரும்.

225. ரசாப்ர குக்கலு:—ரஸம், கந்தகம், அயச்சிந்தூரம், வகைக்குத்தோலா இரண்டு, அப்ரகசிந்தூரம் தோலா நான்கு, குக்கல் தோலா 32, இவைகளுள் ரஸத்தையும் கந்தகத்தையும் ஒன்றுசேர்த்து நன்றாகப்பொடி செய்துகொண்டு மற்றசிந்தூரங்களுடன் கலக்கவும். குக்கிலை நன்றாகப் பொடிசெய்துகொள்ளவும். ஓர் இரும்புப் பாத்திரத்தில் சிந்தில்சார், திரிபலை கஷாயம், வகைக்குச்சின்னப்படி ஒன்று, (திரிபலை வகைக்குத்தோலா 21 இடித்து ஓர் சட்டியில் போட்டு ஜலம் சின்னப்படி எட்டு விட்டு ஒருபடியாக வற்றவைத்துக்கொள்ளவும். சிந்தில் கொடியில் ரஸம் வராவிட்டால் கஷாயம் செய்துகொள்ளவும். சிந்தில் தோலா 64 இடித்துச் சின்னப்படி எட்டு ஜலம்விட்டு ஒருபடியாக வற்றவைத்துக்கொள்ளவும்) சேர்த்து அதில் குக்கிலையும் சேர்த்து அடுப்பேற்றி நன்றாகப் பாகுபோல பதம்வரும்சமயத்தில் இறக்கி முன் சொன்ன சிந்தூரங்களைச் சேர்த்து அதில் திரிகடு, திரிபலை, தந்திவேர், சித்தில், பேய்க்கொம்மட்டிவேர், வாய்விளங்கம், சிறுநாகப்பூ, சிவதை, வகைக்குத்தோலா ஒன்று இடித்துப் பொடிசெய்து போட்டு நன்றாகக்கிளரி அரைத்தோலா வளவு சிந்தில் கஷாய அனுபானத்தில் சாப்பிட வாதரக்தம் தீரும்.

226. பூர்ணசந்திர ரஸம்:—ரஸம், கந்தகம், வகைக்குத்தோலா நான்கு, அயச்சிந்தூரம் தோலா 8, அப்பிரகச் சிந்தூரம் தோலா 8, வெள்ளிபஸ்மம் தோலா இரண்டு, வெள்வங்கம் தோலா 4, தங்கச் சிந்தூரம் தோலா ஒன்று, தாமிரபஸ்மம், வெங்கலபஸ்மம், வகைக் குத்தோலா ஒன்று, ஜாதிக்காய், கிராம்பு, ஏலம், சன்னலவங்கப்பட்டை, ஜீரகம், பச்சைச்கர்ப்பூரம், ஞாழல், கோரைக்கிழங்கு, வகைக் குத்தோலா இரண்டு, (ஜாதிக்காய் முதலிய எட்டு சரக்குகளைப் பொடிசெய்து கொள்ளவும்) இவைகளைக் கல்வத்திலிட்டு குமரிச் சாரிட்டு அரைத்துப் பிறகு முறையே ஆமணக்குவேர் கஷாயத் தாலும் திரிபலை கஷாயத்தாலும் பாவனைசெய்து ஆமணக்கு இலையால் சுற்றி தானியபுடம் மூன்றுநாள் வைத்து எடுத்துக்கல்வத்திலிட்டு முன் சொன்ன ரஸங்களால் அரைத்து கடலையளவு மாத்திரைகள் உருட்டி தினம் ஓர் மாத்திரையை வெற்றிலையுடன் சேர்த்துச்சாப்பிட ஸகல ரோகங்களும் தீரும்.

227. ஸ்ரீ மகாலக்ஷ்மீ விலாஸ ரஸம்:—அப்பிரகசிந்தூரம் தோலா 8, ரஸம், கந்தகம், வகைக்குத்தோலா நான்கு, வெள்வங்கம் தோலா 2, வெள்ளி தோலா ஒன்று, ஸ்வர்ணமாக்ஷிகம் தோலா ஒன்று, தாமிரபஸ்மம் அரைத்தோலா, பச்சைக்கர்ப்பூரம் தோலா நான்கு, ஜாதிபத்திரி, ஜாதிக்காய், விருத்ததாரகவிதை, ஊமத்தை விதை, வகைக்குத்தோலா இரண்டு, தங்கச்சிந்தூரம் தோலா ஒன்று இவைகளைக் கல்வத்திலிட்டு வெற்றிலை ரஸத்தால் அரைத்து இரண்டு குன்றிமணியிடை மாத்திரைகளாக உருட்டிக் காயவைத்து வேளைக்கு ஒரு மாத்திரைவீதம் சாப்பிட சகல ரோகங்களும் தீரும்.

228. ஸ்ரீ நீலகண்ட ரஸம்:—ரஸபஸ்மம் தோலா நான்கு சுவர்ணச்சிந்தூரம் தோலா நான்கு, அப்பிரகச்சிந்தூரம், அயச்சிந்தூரம், முத்துபஸ்மம், வைக்ராந்தபஸ்மம், வகைக்குத்தோலா இரண்டு, வெள்ளி பஸ்மம், பவழபஸ்மம், சுவர்ணமாக்ஷிச் சிந்தூரம், வெள்வங்கம், வகைக்குத்தோலா ஒன்று, இவைகளைக்கல்வத்திலிட்டு அடம்பொதியன் கஷாயம், கொம்பரக்குக் கஷாயம், கொடுவேலிவேர் கஷாயம், இவைகளால் முறையே மும்மூன்றுதடவை பாவனைசெய்து சிறுத ஆமணக்கு இலையால் சுற்றி மூன்றுநாள்

தானிய புடம்வைத்து எடுத்து முன்சொன்ன கஷாயத்தால் அரைத்துக் கடலையளவு மாத்திரைகள் செய்து உலர்த்தி வேளைக்கு ஒரு மாத்திரை சாப்பிட சகல ரோகங்களும் நிவர்த்தியாகும்.

229. ஸாரஸ்வதாரிஷ்டம்:—வல்லாரை தோலா 80, தண்ணீர் விட்டான், நிலப்பூசனிக்கிழங்கு, கடுக்காய், விலாமிச்சவேர், இஞ்சி, சதகுப்பை, வகைக்குத் தோலா இருபது இவைகளை இடித்துப்பானையில் போட்டு ஜலம் சின்னப்படி 32 விட்டு அடுப்பேற்றி எட்டுப்படியாக வற்றவைத்துக் கஷாயம்செய்து வடிகட்டி ஓர் நெய் பானையில் விட்டு அதில் தேன் தோலா 40, சர்க்கரை தோலா 100, சேர்த்து காட்டாத்திப்பூ தோலா இருபது, அரேணுகம், சிவதை, திப்பிலி, கிராம்பு, வசம்பு, கோஷ்டம், அமுக்காரா, தான்றிக்காய், சிந்தில், ஏலம், வாய்விளங்கம், சன்னலவங்கப்பட்டை, வகைக்குத் தோலா ஒன்று இடித்துப் பொடிசெய்து போட்டு தங்கரேக்கு ஒரு தோலா சேர்த்துப் பானையின் வாய்மூடி ஒருமாதம் கழித்து எடுத்து வடிகட்டி வேளைக்கு ஒரு அவுன்சு உபயோகிக்க சகல ரோகங்களும் தீரும். மூளை வலுப்படும்.

## வாஜீகரணம்.

230. நரஸிம்ஹ சூர்ணம்:—தண்ணீர்விட்டான் சூர்ணம், நெரிஞ்சிமுள், வகைக்குத்தோலா 64, பன்றிமோந்தான்கிழங்கு, (இதற்கு வாராஹீ என வடமொழிப் பெயர்) தோலா 80, சிந்தில் பொடி தோலா 100, சேங்கொட்டை தோலா 128, கொடுவேலி வேர் தோலா 40, கருப்பு எள்ளு தோலா 64, திரிகடு வகைக்குத் தோலா 11, இவைகளை இடித்து வஸ்திரகாயம் செய்து (சேங்கொட்டையை மாத்திரம் தனியாக அரைத்து எடுத்துக்கொள்ளவும்) சக்கரை தோலா 280, சேர்த்து தேன் தோலா 140, நெய் தோலா 70, சேர்த்துக்கலந்து பிறகு நிலப்பூசனிக்கிழங்கு பொடி தோலா 64 சேர்த்து நன்றாகக்கலந்து வேளைக்கு அரைத்தோலா சாப்பிட தாது புஷ்டியுண்டாகும்.

231. சதாவரி மோதகம்:—தண்ணீர்விட்டான், சிறுநெரிஞ்சிமுள், குருந்தொட்டி, பெருங்குருந்தொட்டி, பூனைக்காலிவிதை, நீர்

முள்ளி விதை, மொதக்கன் கிழங்கு, வகைக்குத்தோலா நான்கு, கஞ்சாத்தழை தோலா 28, இவைகளை இடித்து வஸ்திரகாயம் செய்து எருமைப்பால் தோலா 28, தண்ணீர்விட்டான்கிழங்கு ரஸம் தோலா 28, நிலப்பூசனிக்கிழங்கு ரஸம் சின்னப்படி ஒன்று, இவை களைச்சேர்த்து அதில் சர்க்கரை தோலா ஆயிரம் சேர்த்து ஓர் தாமிரப்பாத்திரத்தில் பாகுவைத்துக் கிளரி பதத்தில் திரிகடு, திரிபலை, தந்திவேர், திரிஜாதம், இந்துப்பு, பூலாங்கிழங்கு, மல்லிவிதை, விலாமிச்சவேர், கோரைக்கிழங்கு, கஸ்தூரி, கிராகைஷ, மூங்கிலுப்பு, ஜாதிக்காய், ஜாதிபத்திரி, சடாமாஞ்சி, பச்சிலை, வாலேந்திரம், தேசாவரம் சதகுப்பை, செவ்வியம், தேவதாரு, ஞாழல், வெள்வங்கபஸ்மம், ஸாளம், கல்பாசி, குக்கில், ஜாதிப்பூ, ஓமம், கட்பலம், சிறுநாகப்பூ, வெங்தயம், அதிமதுரம், தேவதாரு, சதகுப்பை, தாளிசபத்திரி, பேரிச்சங்காய், ரஸம், கந்தகம், சந்தனம், தகரம், யவக்ஷாரம், வகைக்குத் தோலா ஒன்று பொடிசெய்து போட்டு நன்றாகக்கலந்து வாசனைக்கு பச்சைக்கர்ப்பூரம் சேர்த்துப் பத்திரப்படுத்தி வேளைக்கு அரைத் தோலா முதல் ஒரு தோலா வரை சாப்பிடவும். குறிப்பு:—ரஸம், கந்தகம்; இந்த இரண்டையும் தனியாக அரைத்துக்கொள்ளவும். இதில் இரண்டு சரக்குகள் இரு தடவை வந்திருப்பதால் அந்த சரக்கு இரண்டையும் இரட்டிப்பு இடை எடுத்துக்கொள்ளவேண்டும். கஞ்சாவைப் பாலில் சுத்திசெய்துகொள்ள வேண்டும். மொத்தச் சரக்குகளின் இடை தோலா 103-க்குச் சர்க்கரை தோலா ஆயிரம் சேர்க்கும்போது பொடியின் இடையைவிடச் சுமார் பத்து மடங்கு சர்க்கரை ஆகின்றது. இவ்வளவு இடையுள்ள சர்க்கரை வேறு எந்த மருந்திலும் சேர்ந்திருக்கக் காணவில்லை. வடகங்களுக்குச் செய்யும் முறையில் பாகைத்தயாரித்து அதில் சூர்ணங்களைச்சேர்த்துக் கிளரி வடகமாகச் செய்துகொள்ளவும், ஈரமிருந்தால் வெய்யிலில் வைத்துக்கொள்ளவும். பால் அனுபானமாகக் கொள்ளவும், தாது புஷ்டியுண்டாகும்.

232. ரதிவல்லப மோதகம்:—கஞ்சா விதை தோலா 20, பொடிசெய்து வைத்துக்கொள்ளவும். தண்ணீர்விட்டான் கிழங்கு ரஸம், கஞ்சா ரஸம், வெள்ளாட்டுப்பால், பசுப்பால், வகைக்குச்

சின்னப்படி ஒன்று, சர்க்கரை தோலா 64 இவைகளைச் சேர்த்து அதில் நெல்லிவற்றல், ஜீரகம், கருஞ்ஜீரகம், கோரைக் கிழங்கு, சன்னலவங்கப்பட்டை, ஏலம், பச்சிலை, சிறுநாகப்பூ, பூனைக்காலி விதை, பெருங்குருந்தொட்டி, பனைக்குறுந்து, தாமரைக்கிழங்கு, சிருங்காடகம், திரிகடு, மல்லிவிதை, அப்பிரகச் சிந்தூரம், வெள் வங்கபஸ்மம், கடுக்காய், கிராசைஷ, காகோலி, க்ஷீரகாகோலி, பேரீச் சங்காய், நீர்முள்ளி விதை, கடுகுரோகிணி, அதிமதூரம், கோஷ்டம் கிராய்பு, இந்துப்பு, காட்டு ஓமம், ஓமம், அடபொதியன் கிழங்கு, யானைத்திப்பிலி, வகைக்குத் தோலா ஒன்று இடித்துப் பொடி செய்து போட்டு முன் வைத்திருக்கும் கஞ்சாவிதைப் பொடியையும் சேர்த்துக்கிளரி இறக்கி ஆறின பிறகு தேன் சின்னப்படி கால் சேர்த்துக்கலந்து கஸ்தூரி, பச்சைக்கர்ப்பூரம் உசிதம்போலசேர்த்து (கஸ்தூரி கால்தோலா, பச்சைக்கர்ப்பூரம் ஒரு தோலா யொடிசெய்து சேர்ப்பது வழக்கம்) க்கலந்து வேளைக்கு ஒரு தோலா உபயோகிக்க வும். தாதுபுஷ்டி யுண்டாகும்.

233. மஹாகாமேசுவர மோதகம்:—கோஷ்டம், சிந்தில் மெந்தியம், இலவம்பிசின், நிலப்பூசனிக்கிழங்கு, நிலப்பனைக்கிழங்கு சிறுநெரிஞ்சி முள், நீர்முள்ளிவிதை, தண்ணீர்விட்டான், கசேருகம், ஓமம், பனைக்குருத்து, மல்லிவிதை, அதிமதூரம், நாகபலா, பெருங் குருந்தொட்டி, சதகுப்பை, ஜாதிக்காய், இந்துப்பு, சிறுதேக்கு, கர் காடசிருங்கி, (இதுவே கடுக்காய்ப்பூ) திரிகடு, ஜீரகம், கருஞ்ஜீரகம், கொடுவேலி, சன்னலவங்கப்பட்டை, பச்சிலை, ஏலம், சிறுநாகப்பூ, சாரணத்தி, யானைத்திப்பிலி, கிராசைஷ, பூலாங்கிழங்கு, கட்பலம், இலவம்வேர், திரிபலை, பூனைக்காலிவிதை, வகைக்குத்தோலாஒன்று. கஞ்சாத்தழை தோலா 21, இவைகளைப் பொடிசெய்துகொண்டு அப்பிரகசிந்தூரம் தோலா அரை, விமலச்சிந்தூரம் (இதுவே நிமிளை) கந்தகம், வகைக்குத் தோலா கால், சர்க்கரை தோலா 63, இவைகளைக்கலந்து தேவையான தேன், நெய், இவைகளைவிட்டுப் பிசைந்துகொண்டு சுண்டைக்காயளவு உபயோகிக்கவும். தாது புஷ்டி யுண்டாகும்.

234. காமாக்னி ஸந்தீபனம்:—ரஸம், கந்தகம், அப்பிரக சிந்தூரம், யவக்ஷாரம், சத்திக்ஷாரம், கொடுவேலி, பஞ்சலவணம், பூலாங்கிழங்கு, காட்டு ஓமம், ஓமம், வாய்விளங்கம், தாளிசபத்திரி, வகைக்குத்தோலா இரண்டு, ஜீரகம், சதுர்ஜாதம், (சன்னலவங்கப் பட்டை, பச்சிலை, ஏலம், சிறுநாகப்பூ, இந்த நான்கும் சதுர்ஜாதமெனப்படும்) கிராம்பு, ஜாதிக்காய், வகைக்குத் தோலா நான்கு, விருத்ததாரகவேர், திரிகடு, வகைக்குத் தோலா 6, மல்லிவிதை, அதிமதுரம், சதகுப்பை, கசேரு, வகைக்குத் தோலா 8, தண்ணீர் விட்டான், நிலப்பூசனிக்கிழங்கு, திரிபலை, ஹஸ்திகர்ணம், நாகபலா, பூனைக்காலிவிதை, சிறுகெரிஞ்சிமுள், வகைக்குத் தோலா பத்து. கஞ்சா சமூலம் தோலா 216 (சமூலம்கிடைக்கா விட்டால்கஞ்சாதழை 108, கஞ்சாவிதை 108, தோலாவாக எடுத்துக் கொள்ளவும்) இவைகளை இடித்துப் பொடிசெய்து ஜீனி தோலா 432 சேர்த்துக் கலந்து தேவையான தேன், நெய். இவைகளை விட்டுப்பிசைந்து கொண்டு பச்சைக்கர்ப்பூரம் ஒரு தோலா பொடிசெய்து சேர்த்து நன்கு கலந்து வேளைக்கு ஒரு தோலா சாப்பிடவும். தாதுபுஷ்டி யுண்டாம். குறிப்பு:—தேன், நெய், இவைகளைச் சமயிடையாகச் சேர்க்கக்கூடாது. அளவு வித்தியாசப்படும்படி எடுத்துக்கொள்ளவும். அதாவது கால்படி நெய் எடுத்துக்கொண்டால் சற்று அதிக அளவில் அல்லது குறைந்த அளவில் தேனை யெடுத்துக்கொள்ளவும்.

ஔஷதசாரம் முற்றிற்று.

144. வெடியுப்புக்கட்டு:—காலாம்காய்ச்சல் வெடியுப்புப்பொடி செய்து ஒரு மண்கலயத்தில் பைரவ எச்சம் (நாய்மலம்) உலர்ந்தது பொடிசெய்து அடியில் கொஞ்சம் போட்டு அதன்பேரில் ஷை வெடியுப்புப் பொடியைக்கொட்டிப் பரப்பி அதன் மேலும் ஷை பைரவ எச்சம் பொடிபோட்டு ஷை கலயத்திற்கு ஓடுமூடி சீலைமண் வலுவாகச்செய்து வராகபுடமிட உருகிக்கட்டும்.

145. வெடியுப்புகல்லுப்பு சேர்ந்த கட்டு:—வெடியுப்புமூன்று பங்கு, கல்லுப்பு ஒருபங்கு, சேர்த்துப் பொடிசெய்து முன் சொல்லியபடி புடமிட உருகிக்கட்டும், குன்மம், மகோதரம், முதலியவைகளுக்கு ஓர் கரண்டி விளக்கெண்ணெயில் ஒரு விராகனிடை பஸ்மம் சேர்ததுப் பத்துநாள் உள்ளுக்குக் கொடுக்கவும். நீங்கும்.

146. தாளகக்கட்டு:—சுத்திசெய்த தாளகத்தைக் கட்டியாக எடுத்து சின்ன அம்மான் பச்சரிசி இலையை அரைத்துக் கவசம்கட்டி காயவைத்துக் குகையில் வைத்து வாய்க்கு ஓடுமூடிசீலைமண்செய்து குக்குடபுடமிடவும். உறுகிக்கட்டும். குகையை யுடைத்துக்கட்டியை எடுத்துப் பொடிசெய்து பணவிடை தேனில் கொள்ளவும். சுவாசகாசம் இருமல் முதலியன தீரும். மூன்றுநாள் உப்பில்லாத பத்தியம் முன்றுநாட்களுக்குப் பிறகு இச்சாபத்தியம் மண்டலம் கொள்ளவும்.

147. வங்கபஸ்மம்:—மருதம்பட்டைச் சாம்பல் கொண்டுவந்து மேனிச்சார் (குப்பைமேனி) தும்பைச்சார், வேளைச்சார், வேலிப் பருத்திச்சார், இவைகளைக்கொண்டு ஷை சாம்பலைப் பிசைந்து ஓர் அண்டம் உடைத்துவிட்டுப் பிசைந்து வெள்வங்கக் கட்டிக்குக் கவசம் செய்து சீலைமண் வலுவாகச்செய்து வராகபுடமிட பஸ்மமாகும்.

148. கல்நார்பஸ்மம்:—கல்நார் எடுத்து அதற்கு மேனித் தழையை அரைத்துக்கவசம் கட்டிச் சீலைமண்செய்து வராகபுடமிட பஸ்மமாகும். திரேககம்பகவாயுவுக்குத் தகுந்த அனுபானத்தில் கொடுக்கலாம்.

149. ஸர்வரோகஹரா ரஸம்:—ரசம் கந்தகம், லிங்கம், நாபி, நேர்வாளம், திரிபலை, திரிகடு, கொடுவேலிவேர்பட்டை. இவைகளைச் சமயிடை எடுத்துக் கரிப்பான் சாற்றில் 24 ஜாமம் அரைத்துக் குன்றிமணியிடை மாத்திரைசெய்து காயவைத்துத் தகுந்த அனுபானங்களில் இட ஸர்வரோகமும் தீரும்.

150. பஞ்சானனரஸம்:—ரஸம், அப்பிரகசிந்தூரம், கந்தகம், திரிகடு, கோரைக்கிழங்கு, நாபி, திரிபலை, இவைகளைச்சமயிடையாக எடுத்துப் பொடிசெய்து இரண்டு பங்கு பழையவெல்லம் சேர்த்து குன்றியளவு குளிகைசெய்து தகுந்த அனுபானத்துடன் கொள்ள குன்மம், மகோதரம், முதலியவை நீங்கும்.

151. சண்டேசுவர ரஸம்:—ரஸம், கந்தகம், நாபி, மனோசிலை, இவைகளைச் சமயிடையாக எடுத்து நொச்சியிலைச்சார், இஞ்சிச்சார், இவைகளில் முறையே ஒவ்வொருநாள் அரைத்துக் குன்றியளவு குளிகை செய்து இஞ்சிச்சார் முதலிய அனுபானங்களில் கொடுக்க சன்னி முதலியன தீரும்.

152. திரிமூர்த்தி ரஸம்.—துத்தம் (மயில் துத்தம்) துருசு, லிப்பாஷாணம், இவைகளைச் சமயிடை எடுத்து ஓர் சட்டியில் தேன்விட்டு அதில் இவைகளைப் போட்டுத் தீபாக்னியாக ஒருயாமம் எரித்து எடுத்துப் பாகல் இலைச்சாற்றில் ஓர் யாமம் அரைத்து ஓர் உருண்டையாக உருட்டி ஓர் வஸ்திரத்தில் கட்டி பாகல் இலைச்சாற்றில் டோலாயந்திரமாக ஓர் யாமம் எரித்து எடுத்து ஊமத்தை யிலைச்சாற்றில் ஓர் யாமம் அரைத்துப் பிறகு குன்றிப்பிரமாணம் மாத்திரைசெய்து ஓர் மாத்திரையைப் பசுவின்பால் அனுபானத்தில் கொடுக்க சீதஜ்வரம் தீரும்.

153, சீதமார்த்தாண்டம்:—நேர்வாளம், எலிப்பாஷாணம், இவைகளைச் சுத்திசெய்துச் சமயிடை எடுத்து ஓர் மண்சட்டியில் தேன் விட்டு அதில் இவைகளைப் போட்டுத் தீபாக்னியாக ஒரு யாமம் எரித்தெடுத்து அரைத்துக் குன்றிமணியிடை மாத்திரைசெய்து ஓர் மாத்திரையை திரிகடு கஷாயத்திலிட சீதசுரம் நீங்கும்.

154. **சீதஜ்வராங்குசம்:—** துருசு, ரஸம், வெங்காரம், நாபி, கந்தகம், மயில்துத்தம், தாளகம், இவைகளைச் சமயிடை எடுத்து மெதுபாகல் இலைச்சாற்றில் அரைத்துக் குன்றியிடை மாத்திரை செய்து சர்க்கரை யிலிட சீதஜ்வரம் தீரும்.

155. மிருதோத்தாபன ரஸம்:—சத்திக்ஷாரம் (இதுவே சோடா உப்பு) யவக்ஷாரம், படிகாரம் (இதுவே சீனிக்காரம்) ரஸம், பஞ்ச லவணம், லிங்கம், வெள்ளைப்பாஷாணம், கௌரிபாஷாணம், தொட்டிப்பாஷாணம், மனோசிலை, தாளகம், கந்தகம், வசம்பு, மஸ்தகிநாபி, செங்கழுநீர், கோஷ்டம், தாமிரபஸ்மம், அப்பிரகச்சிந்தூரம், வெங்காரம் (பொரித்தது) அயச்சிந்தூரம், இவைகளைச்சமயிடை எடுத்து திரிகடு தைலத்தில் அரைத்துக் குப்பியிலிட்டு வாலுகா யந்திரத்தில் மந்தாக்னியாக இரண்டு யாமம் எரித்துப் பிறகு வெள்ளுள்ளித் தைலம், நேர்வாளத்தைலம், கொடிவேலி கஷாயம், இவைகளில் முறையே மூன்றுநாள் அரைத்துப் பிறகு பாம்பு, மயில், ஆமை, ஆடு, இவைகளின் பித்தப்பை நீரால் பாவனைசெய்து குன்றியிடை மாத்திரையாகச்செய்து பச்சைக்கர்ப்பூரம் அல்லது பஞ்சதாரையில் உள்ளுக்குக்கொடுக்க சன்னிகள் விலகும்.

156. ஆக்ராணபேதி:—ரஸம் பலம் 1, கந்தகம் பலம் 2, நேர்வாளம் பலம் 3, பெருவாகைவிதை பலம் 4, வெங்காரம்பலம் 5, ஆமணக்கு விதை பலம் 6, காட்டாமணக்கு விதை பலம் 7, கொன்றைப்பழச்சதை பலம் 8, கடுக்காய்த்தோல் பலம்9, சிவதைவேர்பலம் 10, பலாசவிதை பலம் 11, இவைகளைப் பொடிசெய்து முத்தின தேங்காயைக் கண்திறந்து இளநீரை வெளியில் விலக்கி அந்தத்தேங்காய்க்குள் ஷை பொடியை யடைத்துத் தேங்காய் குடுமிகொண்டு கண்மூடி பாதாள யந்திரமாகவைத்து மேலே நெருப்பு இட்டு எரிக்கத்தைலம் விழும். ஷை தைலத்தை முகர்ந்துபார்க்கப் பேதியாகும். நாபியில் தடவபேதியாகும்.

157:—க்ஷயாந்தகலேகியம்:--பேத்திமுட்டி வேர் பலம் 10, கடுக்காய்வேர், தான்றிவேர், நெல்லிவேர், தேத்தான்வேர், சித்தாமுட்டிவேர், பேராமுட்டிவேர், செந்தொட்டிவேர், நன்னாரிவேர், நில

வாகைவேர், தூதுவளைவேர், மாதளைவேர், விலாமிச்சவேர், தாமரை வளையம், செங்கழுநீர்கிழங்கு, நெய்தல்கிழங்கு. அல்லிக்கிழங்கு, இவை வகைக்குப் பலம் 5, இவைகளை இடித்து ஓர் பானையில் இட்டு ஜலம் நான்கு மரக்கால்விட்டுக் கஷாயம்செய்து அரை மரக்காலாக வற்றவைத்து வடிகட்டி அதில் குமரிச்சார், பொன்னாங்காணிச் சார், கரிப்பான் சார், விஷ்ணுக்கிராந்திச்சார், நீர்முள்ளிச்சார், முசு முசுக்கைச்சார், வல்லாரைச்சார், தூதுவளைச்சார், கண்டங்கத்தி ரிச்சார், துளசிச்சார், மிளகுதக்காளிச்சார், பில்வயிலைச்சார், இவை வகைக்குக்கால்படி சேர்த்து அதில் பனைவெல்லம் பலம் 8, ஜீனி பலம் 8, இளநீர் படி 4, பசுப்பால் படி 4, சேர்த்து அடுப்பேற்றி இளம் பாகுபதம் வரும்பொழுது அதில் சுக்கு, திப்பிலி, தேசாவரம் நெல்லிவற்றல், கடுக்காய்த்தோல், தான்றிக்காய்த்தோல்; சடாமாஞ்சி லவங்கப்பட்டை, வலம்புரிக்காய், ஓமம், ஜீரகம், ஜாதிக்காய், ஜாதி பத்திரி, சாஸ்திரபேதி, மரமஞ்சள், மஞ்சள், தேவதாரு, சந்தனம், கோரைக்கிழங்கு, நெரிஞ்சிமுள், ஏலம், கிராம்பு. அதிமதுரம், கோஷ்டம், சதகுப்பை, வகைக்குப்பலம் ஒன்று, மிளகு பலம் 7½ இவைகளைப்பொடிசெய்து போட்டு லேகிய பதமாகக்கிளரி தேன், நெய், வகைக்குப்படி ஒன்று சேர்த்து கலந்து வேளைக்குக் கொட்டைப்பாக்களவு மண்டலம்கொள்ள க்ஷயம், காஸம், முதலியன நீங்கும்.

158. விருஷ்யாமிருத லேகியம்:—தண்ணீர்விட்டான் ரஸம் படி 4, பசும்பால்படி ஒன்று, இஞ்சி ரஸம் படி அரை, இவைகளைச் சேர்த்து அதில் ஜீனி விசை 7½ கலந்து அடுப்பேற்றி பாகுபதம வந்தவுடன் அதில் நெரிஞ்சிமுள், அமுக்காரக்கிழங்கு, தண்ணீர் விட்டான்கிழங்கு, நிலப்பனைக்கிழங்கு, பூனைக்காலிவிதை, அதிமதுரம், பூமி சர்க்கரைக்கிழங்கு வகைக்குப்பலம் 10, நீர்முள்ளிவிதை பலம் 5, ஏலம், ஜாதிக்காய், ஜாதிபத்திரி, லவங்கம், வால்மிளகு, சுக்கு, விலாமிச்சம்வேர், கோரைக்கிழங்கு, திராக்ஷை, பேரிச்சங் காய், சிற்றேலம், ஜீரகம், வகைக்குப்பலம் அரை, தாமரை விதை பலம் 2, சடாமாஞ்சி, சதகுப்பை, மிளகு, வகைக்குப்பலம் கால், இலவம் விதை பலம் அரை, யானைத்திப்பிலி, சந்தனம், செஞ்சந்

தனம், வகைக்குப்பலம் கால், பரங்கிப்பட்டை பலம் 5, கடுக்காய் பலம் 2, தான்றிக்காய், நெல்லிவற்றல், வகைக்குப் பலம் அரை, நன்னாரி, லவங்கப்பட்டை, கோஷ்டம், கசகசா, தாளிசபத்திரி, வகைக்குப்பலம் அரை, சாரப்பருப்பு பலம் 4, மதனகாமப்பூ பலம் கால், வாலுளுவையரிசி பலம் கால், கூகைநீர் பலம் 2, அதிவிடயம் பலம் 2, அக்கிராகாரம் பலம் ஒன்று சாலாமிசிரி பலம் 4, அபினி பலம் கால், பச்சைக்கர்ப்பூரம், குங்குமப்பூ, கோரோசனம், சிற்றரத்தை, வசம்பு, வகைக்குப்பலம் அரைக்கால், கரிப்பான்தூள், வல்லாரைத்தூள், பூரிலைத்தாமரைத்தூள், பொன்னாங்காணித்தூள், வகைக்குப் பலம் 4, கஞ்சா பலம் 4 இவைகளை இடித்து வஸ்திரகாயம் செய்து போட்டுக்கிளறி தேன் படி 3, நெய்படி 2, சேர்த்து பத்திரப்படுத்தி வேளைக்குக் கொட்டைப்பாக்களவு சாப்பிட்டுவர தேகம் மினுக்கும் தாதுபுஷ்டியாகும்.

159. ரஸக்கட்டு:—ஊமத்தங்காயைக் குடைந்து உள்ளிருக்கும் விதைகளைத் தள்ளி துத்திமாதிரி இலை சிறியதாகவும் முக்கால் முழ உயரம் வளர்த்தியுள்ள ஓர் ஊமத்தம் கிளையின் சுனையுள்ளதாயிருக்கும் தழையைக் கசக்கி ஷை காய்க்குள் வைத்து அதன் நடுவில் ஒரு வராகனிடை ரசத்தைவிட்டு அந்தத்தழையை வாயிலும் செலுத்தி அதன்மேல் ஷை விதையை அடைத்து சந்தின் வாயை ஷை பில்லைகொண்டு மூடி சீலைமண் வலுவாகச்செய்து கதுவாலி புடத்திற்கு மேல்படாமல் காடை புடத்திற்குக் குறையாமல் புடம் போட்டு எடுக்க ரஸம் சரிகை வெள்ளிபோலக் கட்டியாயிருக்கும். அதை எடுத்துப் பொடிசெய்து கொண்டு அரிசியிடை எடுத்துப் பனை வெல்லத்தில் வைத்து மூன்றுநாள் அறுவேளை கொள்ள மேகநோய்கள் தீரும். பத்தியம் பாலும் சாதமும்.

160. லிங்கக்கட்டு:—லிங்கம் ஒருவிரல் நீளம் எடுத்து அதன் எடைக்கு நான்கில் ஒருபங்கு தாளகம் நிறுத்து எடுத்து இரட்டைப் பேமுட்டி ரஸத்தால் அரைத்து (தாளகத்தை) ஷை லிங்கக்கட்டிக்குக்கவசம் கொடுத்து வெய்யிலில் உலர்த்தவும். இனி குகை செய்யும்விதம்–செம்மண், புத்துமண், புதுஓடு, இது மூன்றையும் சம

யிடை எடுத்து கோமூத்திரம் விட்டரைத்துக்குகையும் அதற்குத் தகுந்த மேல் சில்லும் செய்து காயவைத்துக்கொள்ளவும். இவ் விதம் தயாரிக்கப்பட்ட குகையின் உள்பக்கத்தில் பூசும் மருந்து—பச்சை மஞ்சள் சார், பேத்திமுட்டிச்சார், இந்தஇரண்டையும் சமனாக எடுத்துக் கலந்து ஷை குகைக்குள் இரண்டு மூன்று தடவைபூசிக் காயவைக்கவும். பிறகு ஷை லிங்கக்கட்டியை ஷை குகைக்குள் வைத்து மேல் சில்லுமூடிகுகைச்சந்துக்குச் செங்கல்பொடி தூவி பிறகு சந்துவாய்க்கும்முழு குகைக்கும் உளுந்தம்மாவால் எழு சீலை மண்செய்து குக்குடத்திற்குத் தாழ்ந்ததும் கதுவாலிக்கு மேல்பட்டதுமாக புடமிடவும். ஆறவிட்டு எடுத்து வேறு குகையில் முன் போல மருந்துதடவிக் காயவைத்து லிங்கக்கட்டிக்கு மூன்போல தாளகத்தால் கவசம் கொடுத்துப் பிறகு சுத்தித்த வெள்வங்கத்தை இலேசாகத்தகடுதட்டி அத்தகட்டால் லிங்கக்கட்டியை தெரியாமல் மூடிஷை குகைக்குள் வைத்து முன்போல செங்கல்பொடி தூவி முன்போல சீலைமண் வலுவாகச்செய்து முன்போல் புடமிடவும் லிங்கம் உருகிக்கட்டும். வெள்வங்கத்தின் சுத்தி—வெள்வங்கத்தை உருக்கி கோமூத்திரத்திலும் நொச்சி ரசத்திலும் வகைக்கு மூன்று தடவை சாய்க்கச் சுத்தியாகும். ஷை லிங்கக்கட்டைப்பொடிசெய்து தகுந்த அனுபானத்திலிட சன்னிதோஷங்கள் விலகும் வாயுரோகங்கள் தீரும். உப்பில்லாத பத்தியம்.

161. லிங்கக்கட்டு:—சாம்பிராணியும் சூடமும் சரியிடை எடுத்துக் கல்வத்தில் அரைக்க மெழுகாகும். அந்த மெழுகை வெள்ளைத்துணியில் தடவி லிங்கக்கட்டிக்கு மேல் போத்தி கவசம் செய்து நெருப்பில் கொளுத்திவிட பற்றி யெரியும். ஆறவிட்டு எடுத்துப் பொடித்துக்கொண்டு முன்போல கொடுக்க முன் குணமுண்டாம்.

162. நவச்சாரக்கட்டு:—(இதுவே சாரக்கட்டாகும்) கொடுவேலி சமூலம் கொண்டுவந்து காயவைத்துச் சுட்டுச்சாம்பல்செய்து ஒருபடி சாம்பலுக்குப் பத்துப்படி ஜலம் விட்டுக்கரைத்து வைத்துக் கொள்ளவும். இரண்டரைப்படி ஜலத்தில் நவாச்சாரம் ஐந்துபலம்

பொடிசெய்துபோட்டு அடுப்பேற்றிக் காய்ச்சிக் குழம்புபோல் வரும் சமயத்தில் கல்வத்தில் கொட்டி அரைத்து பில்லைசெய்து காயவைத்து ஓட்டில் வைத்து மேல் ஓடுமூடி சீலைமண் வலுவாகச்செய்து பத்து எருவில் புடமிடவும். பின்பு முன்போலவே தண்ணீரில் பில்லையை உடைத்துக் கரைத்து முன்போல எரித்து முன்போல பில்லைசெய்து காயவைத்து 15 எருவில் புடமிடவும் பிறகு முன்போல செய்து 20 எருவில் புடமிடவும். உருகிக்கட்டும். பொடி செய்துகொண்டு பணவிடை தகுந்த அனுபானங்களிலிட குன்மம், மகோதரம், முதலியன நீங்கும்.

163. சாரக்கட்டு:—பேரண்டம் கொண்டுவந்து நெருப்பில் போட்டுக் கருக்கி உடைத்துத் தூளாக்கி அமுரியில் நான்கு யாமம் அரைத்துக்குகையும் சில்லும் செய்து காயவைத்து சாரத்தை அந்த குகைக்குள் வைத்து மேல் சில்லுமூடி சீலைமண் வலுவாகச்செய்து காயவைத்துக் குக்குட புடமிடவும். கட்டிப்போகும். முன்போல பொடிசெய்து முன்போல உபயோகிக்க முன்குணமுண்டாம்.

164. அப்பிரகக்கட்டு:—தேவையான சுத்தித்த கிருஷ்ணப் பிரகம் எடுத்துச் சமயிடை காட்டாமணக்குப் பருப்பு சேர்த்து ஓர் பெரிய குகையில் போட்டு உலையில்வைத்துக் குகை முழுதும்படி ஊதிவெடுக்க அப்பிரகம் உருகி மணியாகும். அதை உடைத்து முறைப்படி சிந்தூரம் செய்துகொள்ளவு ம்.

165. வெங்காரக்கட்டு:-வெங்காரத்தை ஓட்டில் வைத்து உப்பிலாம்கொடி வட்டமாக இருப்பதாகப் பார்த்துச் சமூலம் கொண்டு வந்து இடித்துச் சார்பிழிந்து விடி சாரால் நான்கு யாமம் கமலாக்னியாக எரித்து சுருக்குக்கொடுக்க வெங்காரம் கட்டிப்போகும். பொடிசெய்து பணவிடை தகுந்த அனுபானத்திலிட நீர் சுருக்கு முதலியவை தீரும்.

166. வெடியுப்பு திராவகம்:—நாலாம் காய்ச்சல் வெடியுப்புப் பலம் 10, சீனிக்காரம் பலம் 5, பாறையுப்பு 2½, அன்னபேதி, வகைக்குப்பலம் 2½, இவைகளைப் பொடிசெய்துபோட்டு வாலையில்

திராவகம் இறக்கவும். ஷை திராவகத்தில் எந்தச் சரக்கையும் அரைத்துப் பில்லைதட்டிக் காயவைத்துப் புடமிட பஸ்மமாகும்.

167. வெடியுப்பு ஜெயநீர்:—நாலாங்காய்ச்சல் வெடியுப்பு, பலம் 5, படிகாரம் பலம் 5, கந்தக உப்பு பலம் ஒன்று, இவை மூன்றையும் சேர்த்துப் பொடிசெய்து திராவகம் இறக்கவும். ஒரு பீங்கானில் ஒரு விராகனிடை ரஸம் விட்டு ஷை திராவகம் ஒரு விராகனிடை விட்டு உக்கிரமான வெய்யிலில் வைக்க நீரிப் போகும். சகலவியாதிகளுக்கும் தகுந்த அனுபானத்தில் கொடுக்கலாம்.

168. மேகங்களுக்குத் திராவகம்:—மஞ்சள் மெழுகு தோலா 80, மாச்சக்காய் தோலா 15, ஆற்றுமணல் தோலா 24, புனுகு கஸ்தூரி, வகைக்கு விராகனிடை இரண்டு, இந்துப்பு, கல்லுப்பு வகைக்குத்தோலா அரை, கருப்பு உப்பு (இதைப் பாதனூநிம்மக்கு என்றும் சொல்லுவர்) தோலா 5, குங்குமப்பூ, பணவிடை இரண்டு, சாலாமிசிரி தோலா அரை, சீனுகல்கண்டு தோலா 6, விஷ்ணுக் கிராந்தம், நெல்லிக்காய், (காய் அகப்படாவிட்டால் தழை) கீழ்வாய் நெல்லி (இதைச்சாதாரணமாக கீழாநெல்லி என்பர்) தண்ணீரிலில் லாமல் மேட்டில் முளைத்திருக்கும் கரிப்பான் (இதைக் கையாந்த கரை என்பர்) விளாயிலை, ஆகாசத்தாமரை. முள்ளிச்செடி, (இது கண்டங்கத்திரியின் வகையைச் சேர்ந்தது தசமூலத்தில் ஒருசரக்கு) மொடக்கத்தான், இவை வகைக்குத்தோலா 3, இவைகளை இடித் துப்பொடித்து (பொடிசெய்யக்கூடாத வஸ்துக்களை அப்படியே போடவும்) தாமிரத்தால் செய்யப்பட்ட வாலையில் போட்டு மேல் சந்தை மூடி அதைக்கவசம் செய்து, கவசம் செய்யும் விதமாவது —தேன், சுக்காங்கல், கல்லுப்பு, இவைகளை நன்றாக அரைத்து ஓர் துணியில் பூசி அந்தத்துணியால் ஏழுதடவை சுற்றவேண்டும். பிறகு அதற்கு மேல் மண்ணால் ஏழு சீலைமண்செய்து காயவைத்து அடுப்பேற்றி சிறு தீயிட்டு எரிக்கவும். திராவகத்தை வெள்ளைச் சீசாவில் பிடிக்கவேண்டும். ஒரு யாமம் கமலாக்னியாக எரிக்கவும். திராவகம் சிவந்து ரத்தம்போல இறக்கும். சிகப்பாக இல்லாவிட்

# ஆயுர்வேதத்தின் முக்கியத்வம்.

(மதுரை, வள்ளாலபட்டி, பண்டிட் K. P. G. பணிகர் அவர்கள்)

ஆயுர்வேதம் பாரதமக்களுடைய ஒரு பூர்வீக சொத்தாக, சிகரத்தின்மேலிட்ட விளக்காய், இன்றும், என்றும், எங்கும், பிரகாசித்துக்கொண்டிருக்கிறது. வாக்படர், மாதவர், சுசுருதர், சக்கிரதத்தர், சூராபாணி, காசியபன், பைஷஜ்யன், அகஸ்தியர், போகர் முதலிய சித்தர் முதலான மஹா ஆயுர்வேத பண்டிதன்மார்கள் சாஸ்திரக் கிரியைகளிலும் மற்றும் விக்ஞானத்திலும் அசாத்திய ரோகத்தைத் தீர்ப்பதிலும் மஹாவிதக்தன்மார்களாய் இருந்ததுமன்று, பல சம்ஹிதைகளையும் உண்டாக்கினார்கள். ஆங்கிலேயர்களுடைய வருகையால், ஆயுர்வேதத்தின் மகிமை கொஞ்சம், கொஞ்சமாய்ப் புறக்கணிக்கப்பட்டு வருகிறது. ஆங்கிலேயர்கள் தாங்கள் கண்டுபிடித்ததாகச்சொல்லும் சாதனங்களை ஆயுர்வேத சிரோமணிகள் பூர்வீக காலந்தொட்டே கையாண்டுவந்திருக்கிறார்கள். இன்று அநுசரித்து வரும் ஆங்கிலேய வைத்திய மூறைகள் முன் காலத்தில் திராவிடருடைய வைத்திய முறைகளாய் இருந்தன. ஆங்கிலேய வைத்திய முறைகளும் பல பிரிவுகளாய் இருக்கின்றன. அலோபதி, ஹோமியோபதி, ஹைட்ரோபதி, நேசுரோபதி, என்ற நான்கு பிரிவுகளாக இருக்கின்றன. பாரத மக்களின் வைத்தியமும், ஆயுர்வேதம், சித்தாமணி, யூனானி, பிரகிருதி முதலிய நான்குவிதமாக இருக்கிறது. டிஞ்சர், பல்விஸ, ஆஸிட், பில்ஸ், டேப்ளட்ஸ். ஸிரப், எஸ்டிராக்ட், டானிக், என்ற நாமங்களாக ஆங்கிலத்திலும், அர்க்கம், சூரணம், திராவகம், குளிகை, வடகம், ஷர்பத்கள், கஷாயங்கள். என்ற பெயருடன் ஆயுர்வேதத்திலும் சொல்லப்பட்டு ரோகிகளுக்குச் சிகித்சையில் உபயோகப்பட்டு வருகிறது. கோவைசூரிப் பிரயோகம் நம் ஆயுர்வேத பண்டிதரால் கண்டுபிடிக்கப்பட்டதென்று இங்கிலாண்டு தேசத்தில் நடந்த ஒரு வைத்திய கான்பரன்சில் ஒரு ஆங்கிலேய வைத்திய நிபுணரால் தெரிவிக்கப்பட்டும் ஒத்துக்கொள்ளப்பட்டுமிருக்கிறது. ரோக பரிசோதனை விஷயத்தில் சாஸ்த்ரக் ஞானமுள்ள ஒரு பாரத வைத்தியன், பிரயாசையின்றி நாடியின் குணமறிந்து இன்ன ரோகமென்பதை, இலகுவில் கண்டுபிடிக்க முடியும். உதாஹரணமாய் ஒரு ஜ்வர ரோகியை எடுத்துக்கொள்

ளுங்கள். ஆயுர்வேத சிகித்ஸா சம்பிரதாயப்படியும் மற்றும் பல லக்ஷணங்கள் கொண்டும் ஜ்வரத்தினுடைய தாரதம்யத்தைத் தெரிந்துகொள்ள முடியும். ஆங்கிலேய முறைப்படி ஜ்வரமறிவதற்காக உபயோகிக்கும் தர்மாமீட்டர் தவறுதலால் உடைந்துபோனால் அடுத்த தர்மாமீட்டர் வரும்வரை காத்திருப்பதால் ரோகியினுடைய ஸ்திதி கஷ்ட நிலைமைக்கு வந்துவிடும். ஜ்வரத்திற்கு சித்தௌஷதமாகக் கையாண்டுவரும் "க்வைனா" அளவில் கூடுதலானால் சில சமயங்களில் தலைக்கிறுகிறுப்பு காதடைப்பு முதலியன நேருகின்றன. ஆனால் ஆயுர்வேத ரீதியாக ஔஷதங்கள் அளவில் கூடுதலானாலும் யாதொரு கெடுதலும் செய்யாமல் இருக்கின்றன. சாதாரணமாக இரணங்களில் உபயோகிக்கும் கார்பாலிக் லோஷன் சில நாடி விரணங்களில் உபயோகிக்கும்போது அதினுடைய விஷம் ரக்தத்தில் பிரவேசித்தால் அபாயகரமான மற்றும் பல ரோகங்களை உண்டுபண்ணக்கூடும். சர்வாங்க ரணமுள்ள ஒருவனை ஆயுர்வேதத்தில் சொல்லியுள்ள ஜாத்யாதி கிருதம் அல்லது குக்குலுபஞ்சதிக்தகிருதம் முதலியன அண்டா நிறைய விட்டு அதில் அந்த ரோகியை வைத்திருந்தால் யாதொரு கெடுதலும் ஏற்படாது. இவ்வளவு நிர்தோஷமான ஆயுர்வேத சிகித்ஸா முறைகள் சில செப்படி வைத்தியர்களால் அதினுடைய ஸ்திதி மேன்மை முதலியன நசிக்கத்துவங்கிவிட்டன. விஷ வைத்தியம் இன்றும் நம் தாய்நாட்டில் ஒரு உன்னத நிலைமையில்தான் இருந்துகொண்டு வருகிறது. பாம்புகடித்து தீர்க்க யாத்திரைசெல்லும் தருணத்திலிருக்கும் ஒருவனைக்கூட பாரத விஷவைத்தியன் அஞ்சனம், தூமம், நசியம், லேபனம், முதலிய சிகித்சைகளால் இரக்ஷித்திருப்பது ஆங்கிலேய வைத்திய நிபுணர்களைக்கூட அதிசயிக்கச்செய்திருக்கிறதென்பது சர்வஜன சம்மதமாகும். ஆயுர்வேதத்தில் சொல்லியுள்ள சாரீரஸ்தானம், நிதானம், விமானம் முதலான சாஸ்திரங்களுக்கும் ஆங்கிலேய சாஸ்திரங்களுக்கும் யாதொரு வித்தியாசமும் கிடையாது. ஆகையால் பாரத மக்களுடைய சாஸ்திரம் பண்டைய காலமுதல் ஒரு பிரதம ஸ்தானம் வகித்துவந்திருக்கிறது என்பது தெளிவாகும். இப்பேர்ப்பட்ட ஆயுர்வேத சிகித்ஸா பண்டிதன்மார்களை கவர்ன்மெண்டார் தேர்ந்தெடுத்து ரெஜிஸ்டர்செய்தால் (R.I.M.P.) என்ற

பட்டத்துக்குக்கூட பொருமை காட்டும் செயல் வெறுக்கத்தக்க விஷயம் அவரவர்களுக்குரிய அபிமானத்தை தாழ்த்துகிறதாயிருந்தால் ஆயுர்வேத சாஸ்திர உபதேஷ்டாக்களான மஹா பண்டிதன்மாரை அவமானம் செய்வதாகும். ஆகையால் தன்னுடைய உரிமை எவ்வளவு உண்டோ அவ்வளவு கிடைக்காவிட்டால் பத்திராதிபருடைய அபிப்பிராயத்தை அநுசரித்து சர்ட்டிபிகேட்டை வாபஸ் செய்துவிடவேண்டுமென்பதையே நானும் பூர்ணமாக ஆதரிக்கிறேன். சுபம்.

---

## ஜ்வரம்.

(மதுக்கூர் Dr. K. ஷாரோடி அவர்கள்)

மானிட சமூகத்தை ஆதிமுதல் முடிவுவரையில் துன்பப்படுத்தும் ஓர் விசேஷக்கோளாறு இவ்வார்த்தையினுல் அழைக்கப்படுகிறது. இப்பிணி வெவ்வேறு பெயருடன் மற்றப் பிராணிகளையும் பிடிக்கின்றது. மனிதர்களில் ஏராளமான கோளாறுகள் உற்பத்தியாகின்றபோதிலும் ஸர்வ ஸாதாரணமாகவும் எல்லாவற்றிலும் முக்கியமாகவும் ரோகராஜா என்றும் மற்றும் பெயர் வழங்குவதாலும் முதலாவதாக இக்கெடுதலைக் குறிப்பிட விரும்புகிறேன். ஜ்வரம் என்பது யாது? இது உண்டாகக் காரணமென்ன? உற்பத்திக்கு முன் குறிப்புகள் யாவை? இதன் அறிகுறிகள் எவை? இதனுல் யாது கெடுதலை யடைகின்றது? பின் தொந்திரவுகள் எவ்விதம்? வகுத்தறிதல் எப்படி என்றும் மற்றும் பல பிரச்னைகள் எழும்புகின்றன. திரேகத்தில் பழக்க வழக்கமாக நன்னிலைமையிலிருந்துவரும் சூடு (உஷ்ணம்) அதிகரித்துக்காணும் தன்மையை ஜ்வரமென்கிறார்கள். ஆனால் இதைமட்டில் கண்டு ஜ்வரமென்பது சரியல்லவென்றும் (ஸ்வேதா வரோத: ஸந்தாப:) வியர்வையின்மை அதிக உஷ்ணம், ஸர்வசரீரபீடையாகியவை ஒன்று சேர்ந்திருப்பின் ஜ்வரமென்றே நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இப்பிணியேற்பட்டவன் முகத்தைப்பார்த்த மாத்திரத்திலேயே ஜ்வரபீடிதன் என்று ஸாதாரணர் கூட விளங்கிக்கொள்கிறார்கள். நவீன முறையில்

தாபமான இயந்திரத்தினால் உஷ்ணக்கூடுதலைக் கண்டறிந்துகொள்ளலாம். (மித்யாஹார விஹாராப்பாம் தோஷாஹ்யாமாச்ரயாச்ரய:) என்ற வாக்யப்படி ஆகாராதிகளின் விபரீதத்தினால் வேற்றுமைபெற்றத் திரிதோஷங்கள், ஆமாசயத்தில் ஆகார ரஸத்தைப் பக்வப்படுத்தவொட்டாது செய்வதினால் அபக்வமான (ஆம) ரஸம் பல மார்க்கங்களில் செல்ல இவ்வழக்க வேற்றுமையை விலக்கிவிட தாத்வக்னி அதிகமாக முயற்சிப்பதாலும் ஜாடராக்னியின் கொள்கைகளுக்குத் தடைகளேற்படுவதாலும் அதிகச்சூடு திரேகத்திலேற்படுகிறது. இந்நிலைமையில வேற்றுமை வஸ்துக்கள் (விஷம்போன்றவை) சல்யரூபத்தில் சரீரத்திலுள்ளிருக்கையில் (ஆமம்) "தேகேந்திரியமனஸ்தாபி" என்றதன் பொருள் வியக்தமாகிறது. ஆகார விஹாரகாலங்களின் ஹீனயோகாதியோகங்களினால் ஏற்படும் தோஷ விருத்தியைக் கவனித்துப் பரிஹாரமளிக்காததால் அடுத்தபடியாக ப்ரகோபத்தை அடைய நேரிடுகின்றது. அவ்விபரீதத்தில் விசேஷமாகப் பித்தக்கெடுதல்கள் உண்டாகின்றன. ஆகார பாகத்திலீடுபாடில்லாது அதன் உஷ்ணம் சரீரத்தில் பரவுகிறது. உதவியாக் தாத்வக்னிகளும் வலுக்கின்றன. சரீரத்தில் உஷ்ணம் அதிகமாய்க் காண்கிறது. இந்நிலைமையை ஜ்வரம் என்றழைக்கிறார்கள். தாதுக்களின் பலவீனத்தால் வழக்கத்திற்குக் குறைவாகவும் உஷ்ணமேற்படுவதும் தோஷவிக்ருதியினால் ஏற்பட்டுள்ள பசன விகாரமாகும். இந்நிலைமைகளில் தகுந்த பரிஹாரம் தரப்படாவிடில் ப்ரஸராவஸ்தை ஏற்படும். அவ்வவஸ்தையில் ப்ரபலமான வாதம் ஆமக்கெடுதலுடன் சரீரம் முழுதும் சுற்றி ஸ்ரோதஸ்ஸுக்களைபந்துசெய்வதால் சூடுவெளியே போகவிடாமலும் வியர்வையுண்டாகவொட்டாமலும் ஏற்படுகிறது. அத்துடன் தோஷங்களின் ஸ்தான ஸம்ச்ரயம் குறிப்பிட்டவிடத்தில் கெடுதல்களை விளைவித்தலேற்படுகிறது: ஜ்வரத்திற்கு ஸர்வசரீரமும் சித்தமும் ஸ்தானமானதால் இதுகளில் தங்குதலே இப்பிணியின் கொள்கை ஆதலால்தான் ஸர்வாங்கக்ரஹணம் குறிப்பாகக் கூறப்பட்டுள்ளது.

பிணிகள் சிலவற்றில் பரிஹாரமளிப்பது ஸ்தான கமனத்தைப் பொறுத்திருப்பினும் ஜ்வராவஸ்தையில் ஆதிமுதல் அந்தம்வரை

யில் ஆமநிவிர்த்தியையும் ஸ்ரோதஸ்களின் தடை நிவர்த்தியையும் கவனித்தலே வேண்டுமென்பது இங்கு மறக்கத்தக்கதல்ல. விருத்தி கோபம், கமனம், ஸ்தானப்ராப்தியாகிய ஸமயங்களில் வெளிப்பட்டுக் காணும் குணங்கள் பூர்வ ரூபங்களாகக் கூறப்பட்டுள்ளன. இத்தருணங்களில் ரூப நிலைமைகளைப் எதிர்பார்த்து பரிஹாரங்களளிக்கப்படுமாயின் பின் கோளாறுகள் வராமலோ வலுக்காமலோ தடுத்துக்கொள்ளலாமென்று கூறப்பட்டுள்ளது. வைத்திய நூல்களில் ஜ்வரோத்பத்தி காரணமாய் "தக்ஷாவமான ஸங்க்ருத்தருத்ர நிச்வாஸ ஸம்பவ:" என்று கூறியிருப்பதை இங்கு ஆராய்ந்து பார்ப்பது நியாயமாகும். நம் சாஸ்திரங்களும் புராணங்களும் கேவலம் பொய்க்கிடங்குகளென்றே பலர் நினைக்கின்றனர். இது வாஸ்தவமெனக்காண்பிக்க "தக்ஷாபமான" என்ற வாக்யத்தில் (தக்ஷப்ரஜாபதியினின்றும்) ஏற்பட்ட அவமானத்தினால் கோபம் கொண்ட ருத்ரனுடைய மூச்சால் ஏற்பட்டதே ஜ்வரம் என்று கூறியிருக்கிறதல்லவா. இம்முறை பிதற்றலல்லாது வேறென்னவென்று சொல்லலாம். ஆனால் இவ்வாக்யத்தின் உண்மையென்ன? ருத்ரன் என்பது தமோகுண ஸர்வவியாபீ அதாவது பித்தம், தெரிந்தும் மித்யாஹாரமென்ற அபமானத்தினால் கெடுதலினால் கோபமடைந்த அக்னிரூபமான பித்தத்தின் சூட்டினால் உண்டாகிறது என்று ஸங்கதார்த்தமாகும். மற்றதோஷ தூஷ்யங்களின் சேர்க்கையின் ஏற்றக்குறைவுகளை ஒட்டி எண்வித ஜ்வரமாகக் கூறப்பட்டது. எண்விதத்திலும் பிரதானமாகப் பித்தக்கோளாறுகளிருக்கின்றன. அதனால் பரிஹார முறைகள் பித்தாவிரோதிகளே என்று குறிப்பிட்டுள்ளது. (ஊஷ்மா பித்தாத்ருதே நாஸ்தி) மேலும் தக்ஷாபமான என்று குறிப்பிட்டதால் அதன் பரிஹாரத்தில் தைவாச்ரயமான கொள்கை தழுவிவரவேண்டுமென்பது கருத்து. இம்முறை நம் ... கைக்கும் ஆயுர்வேதப் பெருமைக்கும் வழிகாட்டி ...

எந்தப்பிராணிகளையும் ஆரம்ப முடிவுகள் மத்தியகாலங்களில் ஸந்தாபரூபமுமான ஜ்வரம் பி... முடிவு ஜ்வரங்களைப்பற்றி நினைக்கவே முடியாது ... படும் தாபஜ்வரத்தைத்தான் நாம் தெரிந்துகொண்...